www.tamilarangam.net



யாழ்-பல்கலைக்கழகத்தில் தனது விரிவுரைகளை முடித்துவிட்டு
வீடு திரும்பிய விரிவுரையாளர் திருமதி ராஜனி திராணகம
21-9-1989 அன்று கொலை வெறியர்களால் சுட்டு கொல்லப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்-பல்கலைக்கழகத்தில் தனது விரிவுரைகளை முடித்துவிட்டு
வீடு திரும்பிய விரிவுரையாளர் திருமதி ராஜனி திராணகம
21-9-1989 அன்று கொலை வெறியர்களால் சுட்டு கொல்லப்பட்டார்.

www.tamilarangam.net

கடமை உணர்வுடன் செயற்பட்ட இரண்டு பெண் குழந்தைகளின் அந்த அன்புத்தாய் நடுத்தெருவில் பிணமாக்கப்பட்டார்.

சமூக பிரக்ஞையற்ற வெறும் உத்தியோகப் பிண்டங்களை உற்பத்தி செய்யும் எமது கல்வித் தொழிற்சாலைகளில் உருவாகும் ஒரு சில புத்திஜீவிகளில் பலர் சமுதாய அவலங்களைக் கண்டும் காணாமல் வாழும் சுயநலமிகள். இன்னும் சிலர் புத்தகப் படிப்பிலும் சில்லறை விவாதங்களிலும் தம்மைத் திருப்திப்படுத்தும் போலிகள்.

இந்த சமுதாய அமைப்பின் ஏற்றத்தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் கண்டு அதிருப்திப்படுபவர்கள் வெகுசிலரே; இவர்கள் அநீதிகளைக்கண்டு கொதித்தெழுபவர்கள், மனிதநேயத்திற்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணிப்பவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவர்கள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இப்படித் திகழ்ந்த வெகுசிலரில் ராஜனியின் பங்கு குறிப்பிடத்தக்கது.

எமது 'புத்திஜீவிகளும், வசதிபடைத்தோரும் நாட்டைவிட்டு தாம் தப்பித்தால் போதும் என்று வெளியேறிய காலகட்டத்தில் தனது PhD படிப்பிற்காக லண்டனில் இருந்த ராஜனி தனது கல்விக்கான வாய்ப்பை நல்கிய தனது சமுதாயத்திற்கே தான் பயன்பட வேண்டும் என்ற உன்னத நோக்குடன் நாடுதிரும்பினார்.

மக்களிடம் நம்பிக்கையற்று எமது இயக்கங்கள்
 - தன்னாட்டிலேயே பல்வேறு தேசிய இனங்களையும் ஒடுக்கப்பட்ட மக்களையும் வேட்டையாடும் இந்திய அரசிடம் எமது விடுதலையை அடகுவைத்தனர்.

புலிகளின் கொலைப் பாரம்பரியத்தை கண்டித்து வந்த EPRLF இயக்கமானது இன்று TELO, ENDLF உடன் சேர்ந்து, எம்மக்களையும் கொன்று குவித்து தன் இந்திய எஜமானனுக்கு பலி கொடுக்கின்றனர்.

அதே பதவிகள் தமக்கு கிடையாத ஆத்திரத்தால் இந்திய இராணுவத்துடன் மோதுவதும், அதனால் இந்திய இராணுவத்தின் வெறியாட்டத்தால் கொல்லப்படும் மக்களின் பிணங்களின் மேல் பிரச்சாரம் செய்து நேரம் போக்குவதுமாக புலிகள் அரசியல் நடத்துகின்றனர். இத்தகைய சூனியமான ஒரு சூழலில் ஸ்தாபனமயப்படுத்தப்படாத மக்கள் ஆயுதம் தாங்கிய அரக்கர்களுக்கு அஞ்சி வாழும் நிலை. யார்? எதற்கு? ஏன்? கொலைசெய்யப்படுகிறார்கள் என்று கூட அறிய முடியாத அவலம்.

www.tamilarangam.net

இந்நிலையில் நான் மூடிக்கிடந்த பல்கலைக் கழகத்தை திறந்து, யாழ்ப்பாண தமிழ் சமூகத்திற்கு உயிரோட்டத்தை கொடுத்து – முன்னின்று உழைத்தவர்களில் ராஜனியும் ஒருவர்

OCT 87 இல் தமிழ் மக்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்திய ராணுவம் செய்த அட்டூழியங்களையும் அதேவேளை புலிகள் எங்களது தமிழ்மக்களைத் தமது சொந்த நலன்களிற்காக பயன்படுத்தினார்கள் என்பதையும் சர்வதேச அரங்கில் தெரியப்படுத்தினார்.

இம் முயற்சிகள் காலடையில் விரிவடைந்து மனித உரிமைகளிற்கான பல்கலைக்கழக ஆசிரியர் குழுவாக பரிணமித்தது. இந்நடவடிக்கைகளினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படும் ஒரு சூழலும் உருவாகியது.
பல்கலைக் கழகம் என்பது தனது வளவிற்குள் அடங்கிக்கிடப்பதல்ல; சமுதாயத்தில் பிரச்சனைகளை வெளிக் கொண்டு வரும் சாதனமாகவும் பயன்பட வேண்டும் என்ற உணர்வை பல்கலைக்கழக சமூகத்திடையே ஆணித்தரமாக முன்வைத்த ராஜனியின் பங்கு அளப்பரியது.

செந்தளிப்புடன் மலர்ந்த முகம்; நெருங்கிப் பழகுபவர்களிடம் அபரிமிதமான அன்பு; முப்பத்தைந்து வயதிலும் பத்து வயதுப் பிள்ளை போன்ற துள்ளல்; இவர் தான் ராஜனி. குடும்பத்தில் நான்கு பெண்களில் ஒருவரான ராஜனிக்கு, பெண்களின் குறிப்பாக தமிழ்ப் பெண்களின் சுபீட்சத்துக்காகப் போராடுவதே எல்லா அரசியற் பணிகளிலும் கூடிய ஆத்மதிருப்தியளிப்பதாயிருந்தது.

உடற்கூற்றியல் துறையில் (COMPARATIVE ANATOMY) ஓர் இளம் ஆராய்ச்சியாளராக புகுந்த ராஜனி, போர்க்கால வேளையிற்கூட தனது அரசியல் சமூக பணிகளுக்கு மத்தியில் ஆராய்ச்சிப் பணியையும் சளைக்காது மேற்கொண்டு சர்வதேச - உடற்கூற்றியல் சஞ்சிகைகளில் கட்டுரைகள் பிரசுரித்துள்ளார்.

சென்ற மாதம் இவர் லண்டனில் நின்ற சமயத்தில் EPRLF, TELO கூலிப்படைகள் யாழ்ப்பாணத்தில் இவரது வீட்டிற்குள் இருமுறை புகுந்து இவரைத் தேடியுள்ளனர்.

www.tamilarangam.net

இதனையறிந்த, நண்பர்களாலும் உறவினர்களாலும் வேண்டுகோளை மறுத்து

செப்டம்பர் மாதம் பல்கலைக்கழகம் திறந்துவிடுமெனவும் தான் போகாவிடில் ஏற்படும் மாணவர்களின் கஷ்டங்களையும் கூறி

எல்லோரும் வெளிநாடுகளில் இருந்துவிடில் அங்குள்ள மக்களிற்கு யார் இருக்கின்றார்,

எனது நாடு அது,
நான் பணிபுரிய வேண்டிய மண் அது,
அதுவே ஆத்மதிருப்தியானது

என்று கூறி, அவர் யாழ்ப்பாணம் சென்று மூன்று கிழமை தான்.

கொலைதருமாரி சிந்தும் சமூகத்தில் மனித நேயத்துடன் சேவை செய்தது தான்
ராஜனி செய்த குற்றமா?
சமுதாயம் தனக்கென உருவாக்கிய ராஜனியைக் கொன்ற சமூகப்பகைவர்கள்
நிச்சயம் அம்பலப்படுவார்கள்.
இக்கொலைகளினால் இரத்தம் ஊட்டிச் செழிப்பாகும் எமது பூமி இன்னும்

பல ராஜனிகளை பிரசவிக்கும்;
கொலைக் கரங்களை வெட்டி எறியும்;
சமூகப் பகைவர்களை அழித்தொழிக்கும்.

— தென்-ஆசிய தோழமை ஒன்றியம் —
SOUTH ASIA SOLIDARITY GROUP —

---

ஆக்கிரமிப்பு படையினரால் 2.2.1989ல் அநியாயமாக கொல்லப்பட்ட மாணவன் சந்திரயந்திராவை நினைவு கூர்கையில்,

. . . . . . . . . . . .

இவ்வரிய இளம் உயிரின் இழப்பை நினைவுகூர்தல் என்பது எமது சமூகத்தின் எதிர்காலத்தை மேலும் பலவீனப்படுத்தி அதனை நிலை குலையச் செய்வதாக அல்லாது அதனை பலப்படுத்தி கட்டியெழுப்பும் திசையிலான ஓர் தெளிவானதும் ஆரோக்கியமானதுமான பார்வையைப்பெறும் நோக்கில் ஒவ்வொருவரும் தேடுதலை ஆரம்பித்தலிலேயே தங்கியுள்ளது.

Dr. ராஜனி திராணகம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்